
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் - ஒரு நூலகம்.
Registered as a Newspaper



# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 10 வியாழக்கிழமை (26-09-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 222

# பரந்தன் சமர் மேலும் தீவிரம்

# 2 முனைகளில் படை நகர்வு

## 3 நாள்களில் 58 துருப்புகள் சாவு!

கொழும்பு, செப்ரெம்பர் 26

பரந்தனில் தாம் நிலை கொண்டுள்ள பகுதிகளில் இருந்து ''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையின் மூன்றாவது கட்டத்தை ஆரம்பித்து முன்னேறிவரும் ஸ்ரீலங்காப் படைகளுக்கு எதிராக நேற்று நான்காவது நாளாக விடுதலைப் புலிகள் கடுமையாகச் சண்டையிட்டு வருகின்றனர் —

எனினும் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் படையினர் இரு முனைகளில் முன்னேறி வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

அப்பகுதியில் நேற்று முன்தினம் வரை நடைபெற்ற சமரில் 58 படையினர் உயிரிழந்திருக்கின்றார்கள். 65 இற்கு மேற்பட்ட படையினர் காயமடைந்துள்ளனர்.

பரந்தனில் இருந்து—கண்டி வீதிக்கு — தென் கிழக்குப் பக்கமாக முன்னேறிய துருப்புகள் முரசுமோட்டைக் கிராமத்தைக் கைப்பற்றியதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது தெரிந்ததே.

தற்போது மற்றொரு முனையில் — கண்டி வீதியில் இருந்து — தென் மேற்குப் பக்கமாக — நகரத் தொடங்கிய படையினர், கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் ஏழு கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறியிருப்பதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

முரசுமோட்டைக் கிராமத்தைக் கைப்பற்றிய படையினர் அங்கு தமது நிலைகளை ஸ்திரப்படுத்தி வருவதாகவும்—

மறுமுனையில் படை நடவடிக்கை தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் பரந்தனுக்குத் தெற்கே உள்ள கிளிநொச்சி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை இயன்ற அளவு அழிப்பதே தற்போதைய தாக்குதலின் நோக்கம்

### சரத் முனசிங்க கூறுகிறார்

கொழும்பு, செப். 26

''வன்னிப் பகுதிக் காடுகளில் உள்ள புலிகளை வெளியே கொண்டு வந்து சண்டைக்கு இழுத்து இயன்றளவு புலிகளைக் கொல்வதே தற்போதைய இராணுவ நடவடிக்கையின் நோக்கமாகும்'.

— இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க நேற்றுக் கொழும்பில் செய்தியாளர்கள் மாநாட்டில் தெரிவித்ததாக செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்தன.

கிளிநொச்சி நகரைக் கைப்பற்றுவதும் தற்போதைய படை நடவடிக்கைகளின் நோக்கங்களில்ஒன்றா என்பது குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையில் —

திலீபனின் நினைவு தினத்தை ஒட்டி விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தனர் என்றும்—

அதற்கு முந்திக் கொண்டு படையினர் தற்போதைய நடவடிக்கையை ஆரம்பித்து விட்டனர் என்றும் —

சாரப்பட இலங்கை வானொலி நேற்றுத் தகவல் வெளியிட்டது. (உ-3)

## கண்டாவளையில் இருந்து இடப்பெயர்வு

கொழும்பு, செப். 26

தற்போதைய படை நடவடிக்கைகளை அடுத்து கண்டாவளைப் பகுதியில் இருந்து மக்கள் ஆயிரக் கணக்கில் இடம் பெயர்ந்து வருவதாக செய்தி ஏஜென்சிகள் தெரிவிக்கின்றன.

ஜெயந்தி நகர், உருத்திரபுரம், எள்ளுக்காடு, கோணாவில் ஆகிய கிராமங்களில் கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

இப் படை நடவடிக்கைகளினால் மக்கள் சொல்லொணாத் துன்பத்துக்கு உள்ளாக்கப் பட்டிருப்பதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இராணுவப் பேச்சாளர் அதனை அடியோடு மறுத்துள்ளார். மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இராணுவத்தினர் தமது படை நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவர் சொன்னார்.

(உ-3-10)

## யாழ். அரசாங்க ஊழியர்களுக்கும் ஊக்குவிப்புப் பணம் வழங்க முடிவு

### சம்பளத்தில் 25 சதவீதம் கிடைக்கும்

கொழும்பு, செப். 26

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றும் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பணியாற்றும் ஊழியர்களும் இந்த ஊக்குவிப்பைப் பெறுவார்கள்.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் நடைபெறும் பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு இந்த ஊக்குவிப்பை வழங்க பொது நிர்வாக அமைச்சு உத்தேசித்துள்ளது.

மட்டக்களப்பு, புத்தளம், பொலன்னறுவை மாவட்டங்களில் சில பிரதேச செயலகங்களில் பணியாற்றுவோருக்கும் ஊக்குவிப்பை வழங்க சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் அமைச்சர் கைது

சென்னை, செப். 26

தமிழ்நாடு முன்னாள் அமைச்சர் கு.ப. கிருஷ்ணன் நேற்று ஊழல், மோசடிக் குற்றச்சாட்டினிமித்தம் சென்னையில் கைதுசெய்யப்பட்டார்

இதற்கு முன்னர் இவரது முன்பிணை அனுமதி மனுவை நீதிமன்றம் ரத்துச் செய்திருந்தது. (இ)

## கைதடியில் 15 படையினர் கண்ணி வெடிக்குப் பலி!

நேற்றுக்காலை 9 மணியளவில் கைதடிப் பகுதியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல் சம்பவத்தில் 15 படையினர் உயிரிழந்ததாகவும் —

நான்கு படையினர் காயமுற்றதாகவும் —

இலங்கை அரசு அறிவித்ததாக பி. பி. ஸி தெரிவித்தது.

கைதடியில் — பிரதான கண்டி வீதியில் — சித்த மருத்துவத் துறையின் போதனா ஆஸ்பத்திரிக்கு அருகிலேயே— நேற்றுக் காலை கண்ணி வெடிச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது. (உ-3-10-15)

## சிறுப்பிட்டிச் சம்பவத்தில் 3 படையினர் மரணம்

சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற தாக்குதல் சம்பவத்தில் மூன்று படையினர் கொல்லப்பட்டதாகவும் இரண்டு படையினர் காயமடைந்ததாகவும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேற்றுத் தெரிவித்தது.

புத்தூர் முகாமில் இருந்து வீதிகளில் கண்ணி வெடிகளை அகற்ற அனுப்பப்பட்ட படையினர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் கொழும்புத் துறையிலும் கதிரிப்பாயிலும் படையினர் சில ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும்—

கதிரிப்பாயில் உணவுப் பொருள்கள் எடுத்துச் சென்ற பாதுகாப்புப் படையினரின் வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## பொலன்னறுவைப் பகுதி மோதலில் சிப்பாய் பலி

பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள அருமப்புரவில் நேற்று முன்தினம் புலிகள் நடத்திய தாக்குதலில் படையினர் ஒருவர் பலியானார்.

பாதுகாப்புப் படையினர் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த சமயம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தெரிவித்தது.

பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## தட்டாதெருச் சந்தியில் நேற்று மூவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 26

தட்டாதெருச் சந்திப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் மூன்று பொதுமக்கள் காயமடைந்தனர்.

காயமடைந்த இராசரட்ணம் காண்டீபன் (வயது 22 — சங்கானை), கணபதிப்பிள்ளை சிவானந்தன் (வயது 50 — சாவகச்சேரி), இராசரட்ணம் தனபாலசிங்கம் (வயது 47 — உடுவில் கிழக்கு) ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தின் போது படையினருக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு ஏதும் வெளியாகவில்லை.

(உ-15)

## தெரிவுக் குழுவிலிருந்து ஐ. தே க. வெளியேறாது

### கட்சியின் செயற்குழு முடிவு

கொழும்பு, செப் 26

இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காண்பதற்கான நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் தலைமையிலான நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் ஐ. தே. க. தொடர்ந்து பங்குபற்றும்.

ஆனால் அரசாங்க வைபவங்கள், அமைச்சர்கள் கலந்து கொள்ளும் பொது வைபவங்கள் ஆகியவற்றில் ஐ.தே.க. எம். பிக்கள் கலந்து கொள்ள மாட்டார்கள்.

மேற்கண்ட தீர்மானத்தை ஐ. தே. க. செயற்குழு எடுத்துள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இருந்து வெளி

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடப்பட்ட 19 கூ. சங்கக் கிளைகளும் மீண்டும் திறக்கப்பட்டு இயங்குகின்றன

வடமராட்சி, செப். 26 கரவெட்டி, துன்னாலைப் பகுதிகளிலுள்ள 19 கூட்டுறவுச்சங்கக் கிளைகள் மூன்று மாதகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பிரதேசத்துக்கு வந்து சேர்ந்த பாதுகாப்புப் படையினர் கரவெட்டி வடக்கு பகுதி ஊடாக பாதுகாப்பு அரண் வேலியை அமைத்திருந்தனர். இப்பாதுகாப்பு அரண் வேலி ஊடாக வாகனங்கள் செல்ல அனுமதிக்கப் படாமையினால் கரவெட்டி, துன்னாலை பகுதிகளிலுள்ள கூட்டுறவுச்சங்கக் கிளைகளுக்கு நெல்லியடியை தலைமையகமாகக்கொண்ட நெல்லியடி கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் பொருள்களை எடுத்துச் செல்ல முடியாதிருந்தது.

இதனால் இப்பகுதியிலுள்ள 19 கூட்டுறவுச்சங்கக் கிளைகளும் மூடப்பட்டு நெல்லியடியில் அமைக்கப்பட்ட விசேட கிளைகளில் கரவெட்டி, துன்னாலைப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பொருள்களைப் பெற்று வந்தனர்.

விசேட கிளைகளில் பொருள்களைப் பெற்று பொதுமக்கள் அவற்றைத் தமது வீடுகளுக்கு எடுத்துச் செல்வதில்பலத்த சிரமங்களையும், கஷ்டங்களையும் அனுபவித்துவந்தனர்.

தற்போது பாதுகாப்பு அரண்வேலி ஊடாக வாகனங்கள் செல்ல அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கரவெட்டி துன்னாலைப் பகுதிகளில் மூடப்பட்டிருந்த நெல்லியடி — கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 19 கிளைகளும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மத்தி, கரவெட்டி மேற்கு, துன்னாலை கிழக்கு, துன்னாலைமேற்கு, துன்னாலை தெற்கு, துன்னாலை வடக்கு ஆகிய கிராமங்களிலுள்ள 19 கிளைகளுக்கும் லொறிகள் மூலம் உணவுப்பொருள்களையும் ஏனைய அத்தியவசியப் பொருள்களையும் நெல்லியடி கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அனுப்பி வருகிறது. (இ- 173)


## வெளிவாரி பட்டப்படிப்புக்கள்

**G.A.Q. 1st in COM.**

★ மேற்கூறப்பட்ட பாட நெறிக்கு யாழ். பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**G.A.Q.** விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
1st in Com. ஆரம்பம்: **29 - 09 - 1996**

**G.A.Q. பேராதனை 97**
ஆரம்பம்: **05 - 10 - 1996**
(பதிவுகள் எமது நிறுவனத்தால் செய்துதரப்படும்)

விவரங்களுக்கு:- S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

கிளை:
**பிறைற்வே இன்ஸ்ரிரியூட்**
மூத்தவிநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை.
(இரு நிறுவனங்களிலும் விரிவுரைகள் நடைபெறும்)
(42862)


## முக்கிய அறிவித்தல்

### தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்
### விசேட பொதுக்கூட்டம்
### 30 - 9 - 1996

காலம்: **30-09-96** திங்கட்கிழமை
நேரம்: காலை **11-00** மணி (புதிய நேரம்)
இடம்: தெல்லிப்பளை பிரதேச செயலகம், மல்லாகம்.

தலைமை: திரு. நா. வேதநாயகன்
பிரதேசசெயலரும், பிரதி கூட்டுறவு உதவி ஆணையாளரும்

விடயம்: **16-04-95**இல் உள்ளவாறான பொதுச் சபைப் பிரதிநிதிகள் பட்டியலில் இருந்து இயக்குநர்சபைக்கு, 7 பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல்.

**30-09-96** இல் நடைபெறவுள்ள பொதுக்கூட்டத்துக்கு பொதுச்சபைப் பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

குறுகியகால அறிவித்தலின் பேரில் மேற்படி கூட்டம் நடத்தப்படுவதால் தனித்தனி அறிவித்தல்கள் வழங்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

குறிப்பு:

இது சம்பந்தமாக மேலதிகமான விபரங்கள் தேவைப்படின் தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

**25-09-96** ஆம் திகதிய வலி வடக்கு பிரதேச செயலரின் 1558/1 இலக்க கடிதப்படி இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.

(சி. முருகையா)
செயலாளர்
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்.

25. 09. 96
புகையிரத நிலைய வீதி,
மல்லாகம் சந்தி.
(சி-3188)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தில் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் நற்பணியாற்றி ஓய்வு பெற்றவரும் எமது வித்தியாலயத்தில் ஆசிரியராக இருந்து இடம் பெயர்ந்த

திருமதி மனோன்மணி குணரெத்தினம்
அவர்களின் அன்புக் கணவருமாகிய

### முருகேசு குணரெத்தினம்

அவர்களின் மறைவிற்காக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இந் நிகழ்வால் சோகமுற்று இருக்கும் குடும்பத்தினருக்கும் எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம. வி.
(42859)

## பட்ஜட் நவ. 6 இல்

கொழும்பு, செப். 26 பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் மூன்றாவது வரவு- செலவுத்திட்டம் நவம்பர் மாதம் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது. (இ-3)

## புதிய குருவாக அபிஷேகம்

வடமராட்சி, செப். 26 திவ்விய நற்கருணைநாதர் சபையைச் சேர்ந்த அருட்திரு. ஞானநேசன் அருளானந்தன் கொழும்பு புறக்கோட்டை புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில். பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி ஒஸ்வல்டோபடில்லாவினால் இன்று வியாழக்கிழமை திருநிலைப் படுத்தப்படுவார்.

அருட்திரு ஞானநேசன் அருளானந்தன் பருத்தித்துறை முனையைச் சேர்ந்தவராவார். (இ-173)

## சிறுப்பிட்டியில் காயமடைந்தவர் மரணம்

சிறுப்பிட்டியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கிரனேற் வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் காயம் அடைந்து ஆபத்தான நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் அங்கு மரணமானார்.

புத்தூர்கிழக்கைச் சேர்ந்த சரவணை ஐயாத்துரை(வயது 56) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் மரணவிசாரணையின் பின் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-15)

## கோப்பாய்ப் பகுதிக்கான விசேட அடையாள அட்டை

### சனிக்கிழமை வழங்க ஏற்பாடு

வலிகிழக்கு பிரதேச செயலர் பிரிவில் கோப்பாய் வடக்கு, உரும்பராய் வடக்கு, உரும்பராய் கிழக்கு, ஊரெழு நீர்வேலி தெற்கு, நீர்வேலி வடக்கு, நீர்வேலி மேற்கு, சிறுப்பிட்டி கிழக்கு, சிறுப்பிட்டி மேற்கு, புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு, அச்செழு, வாதரவத்தை ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டை கோப்பாய்ப் பிரதேச செயலகத்திலும் —

வளலாய், இடைக்காடு, தம்பாலை, கதிரிப்பாய், பத்தைமேனி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால் கிழக்கு, ஆவரங்கால் மேற்கு, புத்தூர் வடக்கு, நவக்கிரி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டை ஆவரங்கால் மேற்கு, கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும் — 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப் பட்டவர்கள் தமது கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை உறுதிப்படுத்திய பின்னர் குறிக்கப்பட்ட திகதியில் சென்று அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது. (டு)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசையா - லில்லி பசுபதி
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

ஏழாலை வடக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி இராசையா-லில்லி பசுபதி 24-09-1996 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சாமுவேல் இராசையாவின் அன்பு மனைவியும், இரத்தின கோபலசிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), இராசபூபதி (ஓய்வுபெற்ற ஆசிரியை), இரத்தின பூபதி ஆகியோரின் தாயாரும், செல்லம்மா (ஓய்வுபெற்ற பிரதமதாதி), தம்பிராசா (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்) ஆகியோரின் மாமியாரும், ஜெயராஜா (ஆஸ்திரேலியா), இரத்தினமலர் (ஆசிரியை, வவுனியா), போல் நேசராஜன் (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி) காலஞ்சென்ற மலர்அரசி (ஆசிரியை), மதியரசி, அரசமோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியும், கௌசல்யா, மனோஜ், டில்சன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை களவாவோடையில் உள்ள மகனின் இல்லத்தில் நேற்று 25-09-96 பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை தெற்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. இரத்தினகோபாலசிங்கம்
(மகன்)

களவாவோடை
ஏழாலை தெற்கு,
ஏழாலை.
(42853)

### இராமச்சந்திரக் குருக்கள் பிரபாகரசர்மா

தம்பாலை அச்சுவேலியைச் சேர்ந்த இராமச்சந்திரக் குருக்கள் பிரபாகர சர்மா 25.09 96 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமச்சந்திரக் குருக்கள் — செல்வரத்தினம்மாவின் அன்பு மகனாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 26.09.96 (வியாழன்) காலை பத்து மணிக்கு நடைபெறும்.

தகவல்:
க. ஜெயராம சர்மா
(மாமன்)

318, கிராமவிஸ்தரிப்பு
திட்டம்
திருநெல்வேலி
(42860)

### தம்பிப்பிள்ளை அப்பாக்குட்டி
(வைத்திலிங்கம்)
(ஓய்வு பெற்ற தலைமை அதிபர்)

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிப்பிள்ளை அப்பாக்குட்டி 24-09-96 இல் காலமானார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும், இரத்தினராசா (பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை), இரத்தினலட்சுமி, இரத்தினகுமார் (சவூதி), இரத்தினமலர் (நோர்வே), இரத்தினேஸ்வரன் (சுவிஸ்), இரத்தினலிங்கம் (ஜேர்மனி), இரத்தினரதி (வத்தளை) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், திலகரட்ணம் (சுவிஸ்), ரவிவர்ணன் (நோர்வே), குகநாதன் (ஆஸ்திரேலியா), ஜெயகங்கா (யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி. பருத்தித்துறை), மாலாதேவி (கொக்குவில்), விஜயலட்சுமி (சுவிஸ்), கிரியாசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், மயூரன், குகாயினி, சாரங்கா, தர்மினி, வர்மினி, பொபி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (26-09-96) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.


தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

தட்டாங்குளம்
பிள்ளையார் கோவிலடி,
மீசாலை வடக்கு.
(42863)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தீர்த்தோற்சவ சிறப்புமலர்



★★ 26 – 09 – 1996 ★★

## மூலஸ்தானத்தில் சங்கு சக்கரமாக இருந்து அருள்பாலிக்கும் நாராயணன்

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய மாயவனின் வரலாற்றுச் சிறப்பினை முதற்கண் எடுத்து நோக்குவோம். ஈழத் திருநாட்டில் எழில் மிகு யாழ்ப்பாணத்தில் நெய்தலும், மருதமும் ஒருங்கே அமையப்பெற்ற வளமிகு வல்லிபுரக் குறிச்சியிலே அமைதியான சூழலிலே இந்தஆலயம்அமைந்துள்ளது. மூர்த்தி தலம், தீர்த்தம் ஆகியவற்றை ஒருங்கே கொண்ட இந்த ஆலயம் புதுமையும், சரித்திரப் பிரசித்தியும் உடையது.

வங்கக் கடலை அண்டிய நிலப்பரப்பில்எழில்கொஞ்சும் இராஜகோபுரத்துடன் கம்பீரமாகஇவ்வாலயம்நிமிர்ந்து நிற்கின்றது. சைவம், வைணவம் என்ற பாகுபாடின்றிச் சைவ மக்களாலேயே பூசை, வழிபாடு, நிர்வாகம் என்பன நடாத்தப்பெறுதல் இவ்வாலயத்தின்ஒரு சிறப்பம்சமாகும்.

''அதர்மம் எங்கே தாண்டவமாடுகின்றதோ அங்கே கண்ணன் அவதாரம் எடுக்கின்றான்.''

இதற்கமையப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் புரட்டாதிப் பூரணை நாளில் வங்காள விரிகுடாக்கடல் என்றுமில்லாதவாறு மலை போல அலைகள் திரண்டு கரையிலே மோத, மீனவர்களின் மீன் பிடிவலைகள் தாறுமாறாகக் கிழிக்கப்பட்டன. வள்ளங்களை அலைகள் விழுங்கப் பாரிய மச்சம் ஒன்று மூன்று நாள்கள் தொடர்ச்சியாக இந்த பாதகச் செயலில் ஈடுபட்டது.

அந்நாளிலே அப்பகுதியில் வல்லிநாச்சியார் என்னும் கிருஷ்ண பக்தை மாயவனைப் புத்திரப் பேற்றின் பொருட்டு கல்லும் கனியும் படி அல்லும்



பகலும் வழிபட்டு வந்தாள். கடலைக் கலக்குக் கலக்கிய மூன்றாம் நாள் நடுநிசியில் நாராயணன் அவளுக்கு சொர்ப்பனத்தில் தோன்றி வங்கக்கடலோரத்திற்கு வரும்படி வேண்டுகோள் விடுத்தார்.

அவனது கட்டளையைச் சிரமேற் கொண்டு கடற்கரைக்கு வந்துசேர்ந்த கடலைக் கலக்கியடித்த மகரம் பேரழகுடன் கூடிய குழந்தையாக அம்மையாரின் மடியிலே வந்து வீழ்ந்தது பரதவர்கள் எல்லோரும் பக்திப் பரவசத்துடன் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

குழந்தையாக மடியிலே தவழ்ந்த கண்ணன் சக்கர வடிவமாகத் தன்னை மாற்றிக் கொண்டான். அச்சக்கரத்தை பல்லக்கிலே சுமந்து வந்த அடியார்களுக்குத் தாகம் எடுத்தமையால் பல்லக்கை இறக்கி வைத்துவிட்டு நீர் அருந்தச் சென்றனர். சக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டது போல் நிலத்தினுள் ஊன்றிவிட்டது இதனால் மக்கள் அவ்விடத்திலே கொட்டிலை அமைத்து வழிபட்டனர் என்பது கர்ண பரம்பரைக் கதை.

வல்லிபுரக் கோவில் மூலஸ்தானத்தில் நாராயணன் சங்கு சக்கரமாகவே காட்சியளிக்கின்றான். அங்கு அவனது உருவத் திருமேனியில்லை. அருவுருவத் திருமேனியே பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது.

இந்த வல்லிபுர மாயவன் ஆலயம் பண்டைப் பெருமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

பாலகிருஷ்ணன் இரகுநாதன்
அதிபர், புலோலி மெ. மி. த. க. பாடசாலை

## அடியவரை அரவணைக்கும் பரந்தாமன்

ஸ்ரீமத் பகவத்கீதை மகாபாரதம் என்னும் இதிகாசத்தில் அடங்கியுள்ளது. பதினெட்டு அத்தியாயங்களில் எழுநூறு சுலோகங்கள் அடங்கியுள்ளன.

இறைவனை மனிதன் தேடவேண்டிய அவசியமில்லை. இறைவனே கன்றைப் பிரிந்த தாய்ப் பசுபோல நம்மை நோக்கி அழைக்கிறார். உலகியல் பொருள்களில் பற்றுவைத்து அதில் மூழ்கி இருப்பதால் அவரது அழைப்பு நமக்கு கேட்கவில்லை.

கீதையின் மகத்துவம் என்னவெனில் நூல் முழுவதையும் படிக்கவாய்ப்பில்லாதவர்கள் சில சுலோகங்களை படித்து பொருள் உணர்ந்தால் உயர்வு அடையலாம். கீதையின் நிறைவான அத்தியாயத்தில் உள்ள சுலோகங்கள் இரண்டு பகவானின் கருணையையும் அரவணைக்கும் தன்மையையும் வெளிப்படுத்துகின்றன.

''என் பால் மனம் வைத்து, என்னிடம் பக்தி பூண்டு என்னை ஆராதித்திடுவாய். என்னை வணங்கு, என்னையே அடைவாய். உனக்கு உறுதி கூறுகிறேன். எனக்கினியான் நீ''. (அத்தி. 18, சுலோகம் 65)

''தர்மங்களையெல்லாம் அறவே தியஜித்துவிட்டு என்னையே சரணடைக. பாபங்களனைத்திலிருந்தும் உன்னை நான் விடுவிப்பேன்; வருந்தாதே. (அத்தி. 18, சுலோகம் 66)

சுவாமி விவேகானந்தர் இந்தியா முழுவதும் கால்நடையாகச் சென்ற பொழுது கையில் வைத்திருந்த நூல் கீதையாகும். கீதை இன்றைய உலக சஞ்சலங்களை தீர்க்கக் கூடிய அரு மருந்து. இப் புண்ணிய தினத்தில் இருந்து கீதையைத் தினமும் நன்கு படித்து வாழ்க்கைத் தத்துவத்தை அறிந்து அமைதி பெறுவோமாக.

— சுவாமி சித்ருபானந்தா

மலராக்கம்:
'உதயன்' வடமராட்சி செய்தியாளர்

வண்ண வண்ணசாறி வகைகள், பெண்களுக்கான றெடிமேட் ஆடைகள், ஆண்களுக்கான சேட்டிங் சூட்டிங், வேட்டி வகைகள் போன்ற புடைவைத் தினுசுகளுக்கு:

புதிய சீமாட்டி
புடைவை அகம்
முதன்மைச் சாலை,
நெல்லியடி.

கிளை:
சகுந்தலா
புடைவை மாளிகை
முதன்மைச் சாலை,
நெல்லியடி.

தரமான பாண், பணிஸ், கல்பணிஸ் தயாரிப்பாளர்கள்
மைலன் வெதுப்பகம்
வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

பாண், பணிஸ் வகைகள், கேக் வகைகள், பிஸ்கட், ரொபி வகைகள் தேவைப்படும் போது நாடுங்கள்:
சுபாஸ் வெதுப்பகம்
முதன்மைச்சாலை,
நெல்லியடி.

நெல்லியடியில்:
★ தின வார பத்திரிகைகள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்.
★ பாடசாலை உபகரணங்கள்.
★ காகிதாதிகள் இவற்றைப் பெற்றிட நாடுங்கள்:
மொடோன் ஸ்ரோர்ஸ்
(உதயன் முகவர்),
பஸ் நிலையம், நெல்லியடி.

மந்திகையில்
★ அனைத்து ஆங்கில மருந்து வகைகள்.
★ பால் மா வகைகள் தேவைகளுக்கு நாடுங்கள்:
மந்திகை மருந்தகம்
பஸ்தரிப்பிடம், மந்திகை.

பருத்தி. மாநகரில்
சிறந்தரகம், நியாயவிலை.
மணிப்புரி, காஞ்சிபுரம் சாறி வகைகள், புதிய டிசைன் றெடிமேட் ஆடைகள், பட்டு வேட்டி வகைகள் ஆகியவற்றை எண்ணம் போல் தெரிவுசெய்ய நாடவேண்டிய இடம்:
சுகுணலட்சுமி ஆடைஅகம்
140, பிரதான வீதி,
பருத்தித்துறை.

லுமாலா, ஏசியா (ஆண்கள், பெண்களுக்கான) சைக்கிள்கள், சைக்கிள் உதிரிப் பாகங்கள், அழகு சாதனப் பொருள்கள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்:
ராஜன் சைக்கிள் வேக்ஸ்
பிரதான வீதி,
பருத்தித்துறை.

பருத்தித்துறை நகரில்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ அலுவலக உபகரணங்கள்
★ அழகு சாதன தையல் பொருள்களுக்கு:
அம்பிகா
249, பிரதான வீதி,
பருத்தித்துறை.

★ வண்ணவண்ண சாறி வகைகள்
★ றெடிமேட் ஆடைகள்
★ பட்டு வேட்டிகள்
போன்ற பல்வேறு புடைவை வகைகளுக்கும் நாடுங்கள்:
மயூரன் வண்ணச் சோலை
(குட்லக் எம்போறியம்)
பிரதானவீதி,
பருத்தித்துறை.

★ ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
★ வனிலா ஐஸ்கிறீம்
★ சர்பத்
★ கிறீம் சர்பத்
★ ஐஸ்சொக்
★ ஐஸ்பழம்
★ ஒடருக்கு ஐஸ்கட்டி
★ பிஸ்கட், ரொபி வகைகளுக்கு:
குணம் குளிர்களி அகம்
GUNAM CREAM HOUSE
பஸ் நிலையம்,
பருத்தித்துறை.

தரமான புகைப்படங்களுக்கு
குகன் ஸ்ருடியோ
தபாற்கந்தோரடி,
இரண்டாம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

நியூ சுப்பர்றாங்
பார்மஸி அன் குறோசரி,
பஸ் நிலையம்,
பருத்தித்துறை.

பாடசாலை உபகரணங்கள் காகிதாதிகள் பெற்றிட:
தமிழ்ப்பூங்கா புத்தகசாலை
முதன்மைச்சாலை,
நெல்லியடி.

★ மண விழாக்கள்
★ பிறந்தநாள் விழாக்கள்
★ பூப்புனித நீராட்டு விழாக்கள் போன்ற பல்வேறு பொது விசேட வைபவங்களுக்கும் சிறந்தமுறையிலும், நவீன தொழில் நுட்பத்துடனும் வீடியோபடம் பிடித்துக்கொள்ள நாடுங்கள்:
ராஜன் வீடியோ
மூவிஸ் சென்ரர்
பருத்தித்துறை.

★ அழகு சாதன பொருள்கள் ★ பாடசாலை உபகரணங்கள் ★ காகிதாதிகள்
இவற்றைப் பெற்றிட
சாந்தி ஸ்ரோர்ஸ்
பிரதானவீதி, பருத்தித்துறை.

பருத்தித்துறை நகரில் சிறந்த தங்கப்பவுண் நகைகளுக்கு!
சுசீலா ஆபரண மாளிகை
தங்க நகை வியாபாரம்,
258, பிரதான வீதி,
பருத்தித்துறை.

தரம் மிக்க பாண், பணிஸ், கேக், கல்பணிஸ், பிஸ்கட், சொக்லேட் வகைகளுக்கு:
ராணி வெதுப்பகம்
முதலாம் கட்டைச் சந்தி,
பருத்தித்துறை.

★ ஆங்கில, ஆயுர்வேத மருந்துவகைகள்
★ கோயில் அபிஷேக திரவிய வகைகளுக்கு:
ஸ்ரீ முருகன் மருந்தகம்
பிரதானவீதி, பருத்தித்துறை.

1 கீதையின் நாயகனே
கிருஷ்ணா கிருஷ்ணா
ஏழைகள் மனது வைத்தோம்
கிருஷ்ணா கிருஷ்ணா
எங்கள் துயர் தீர்த்தருள்வாய்
கிருஷ்ணா கிருஷ்ணா
பாதகம் செய்வோரை
மன்னித்தருள்வாய்
கிருஷ்ணா கிருஷ்ணா

2 காடுகள், கற்பகச் சோலைகள்
உன்பதியில் உன்பதியில்
அமைத்தோமே
உன் எதிரில் அவையாவும்
பாழாவதோ
கோலமும் வயல் கோத்திடும்
சீலமும் — கொண்ட
எம் சுற்றம் சோறு தேடி உலர்ந்து
வாட
நீ பாற்கடலில் பள்ளிகொள்வது
நீதியாமோ?

3 பாஞ்சாலி மானம் காத்தவனே-
எனக்கும்
உயிர், மானம் தந்தவனே
தர்மம் தலை காக்கும் என்றவனே
தர்மத்தின் தலைவா
தர்மநீதி தழைத்தோங்க
உன்னருள் பாலித்து வா!

இயற்கைநேசன்
மா கனகராசா

சுதர்சனம்



ஐடியல்
வெதுப்பகம்
நெல்லியடி

★ நுகர்ச்சிப் பொருள்க்ள்
★ எரிபொருள்
★ கனரகப் பொருள்கள்
★ கிராமிய வங்கிச்சேவை
★ துணி வகைகள்
★ வெதுப்பக உற்பத்திகள்
★ விவசாய உபகரணங்கள்
★ கதிரைகள் வாடகைக்கு வழங்கல்

இவை போன்ற பல்வேறு சேவைகளைப் பெற்றிட நாடுங்கள்



புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.
கேட்டதும் கொடுக்கும் கீதையின் நாயகனே,
எமக்கு அமைதியும் சமாதானமும் தந்திடுவாய்!
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேலை நிறுத்தம் செய்ய பலஸ்தீன அரசு அழைப்பு

## உல்லாசப் பயண சுரங்கப்பாதைக்கு எதிர்ப்பு

ஜெருஸலம், செப். 26

பழைய ஜெருஸலத்தில் பள்ளிவாசல் அமைந்துள்ள பகுதி வழியாக உல்லாசப் பயணிகள் சுரங்கப் பாதை ஒன்றை இஸ்ரேல் அமைத்து வருவதற்கு பலஸ்தீனத் தலைவர் யாஸிர் அரபாத் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு எதிராக வேலை நிறுத்தம் செய்யுமாறு அவர் பலஸ்தீன மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பான தீர்மானம் பலஸ்தீன சட்டப் பேரவையிலும் நிறைவேற்றப் பட்டுள்ளது.

இஸ்ரேல் எடுத்துவரும் இந்த சுரங்கப்பாதை திறப்பு முயற்சியை வாபஸ் பெற வேண்டுமென ஐ. நா. பாதுகாப்புச் சபையை பலஸ்தீனம் ஏற்கனவே கேட்டுக் கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேல் காவல்துறையினருக்குமிடையில் அப்பகுதியில் மோதல்கள் இடம்பெற்றன.

இஸ்ரேல் அமைத்து வரும் இந்த சுரங்கப்பதையின் நீளம் 500 மீற்றர் ஆகும். (இ-10)

## கேக்கினால் உருவாகிய 10 அடி உயர பிரமிட்!

பாங்கொக், செப் 26

தாய்வான் நாட்டின் நினைவுதினக் கொண்டாட்டத்தை யொட்டி தென் தாய்வான் வாசிகள் 10 அடி உயரமுள்ள கேக்கினால் ஆன பிரமிட் ஒன்றை உருவாக்கி உள்ளனர்.

73 அடுக்குகளைக் கொண்ட இந்த கேக் பிரமிட்டைத் தயாரிக்க 5 இலட்சம் தாய்வான் டொலர்கள் செலவாகியுள்ளன.

தாமரை விதைகளை அரைத்து கலந்து செய்யப்பட்ட 25 ஆயிரம் கேக்குகள் இதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

தாய்வான் நாட்டு நினைவு தினக் கொண்டாட்டங்கள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

14 ஆம் நூற்றாண்டில் சீனாவை ஆண்ட மங்கோலிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்க தாமரை விதையைப் பயன்படுத்தி செய்யப்பட்ட சிறு கேக்குகளின் மூலமே இரகசியத் தகவல்கள் அனுப்பப்பட்டனவாம்.

இக்காரணத்தினாலேயே தாய்வானில் தாமரை விதைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## 2 ஆயிரம் ஆண்டுக்கு முன் செயற்கை இருதயம்!

டெக்ஸாஸ், செப். 26

இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னர் செயற்கை இருதயம் தயாராகிவிடும் என அறுவை மருத்துவ வல்லுநர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலுள்ள டெக்ஸாஸ் இருதய பரிசோதனை நிறுவனத்தைச் சார்ந்த மருத்துவர் ஓ. எச். பட் பிறேஷர் கூறுகையில், இருதய நோயாளர்கள் நலமுடன் வாழச் செய்வதே தங்கள் இலட்சியம் எனத் தெரிவித்துள்ளார்.

ஒரு திராட்சைப் பழத்தின் அளவில் இருக்கும் இந்தச் செயற்கை இருதயம் செயற்கை மின் சக்தியால் இயங்கும் எனவும் ஒரு நிமிடத்துக்கு 10 லீற்றர் இரத்தத்தை இயக்கும் ஆற்றலை உடையது எனவும் அவர் தெரிவித்தார் (இ-10)

## உலக அரங்கில்

## அணு ஆயுத ஒழிப்புக்கு 5 வல்லரசுகள் ஒப்பந்தம்

உலகில் ஐந்து அணு வல்லரசுகள் முக்கியத்துவம் வாய்ந்த அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தத்தில் நேற்று முன்தினம் கையொப்பமிட்டுள்ளன.

ஐ. நா. சபையில் இடம்பெற்ற வைபவத்தில் அமெரிக்க அதிபர் கிளின்ரன் முதலில் கையொப்பமிட்டார்.

ரஷ்யா, பிரான்ஸ், சீனா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

அணு ஆயுதங்களை ஒழிக்க முடியும் என்பதை அந்த ஒப்பந்தம் கோடி காட்டுவதாக அதிபர் கிளின்ரன் குறிப்பிட்டார். (இ-10)

## உலகில் 80 கோடி மக்கள் பசியால் வாடுகின்றனர்

வாஷிங்டன், செப். 26

உலகில் 80 கோடிக்கும் மேற்பட்டோர் தினமும் பசியால் வாடுகின்றனர் எனவும் —

50 கோடிக்கு மேற்பட்டோர் போதிய ஊட்டச்சத்து இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் — உலக வங்கி கடந்த திங்களன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உலக வங்கியும், சர்வதேச நிதி அமைப்பும் அடுத்த வாரத்தில் அமெரிக்காவிலுள்ள வாஷிங்டனில் தங்களது ஆண்டுக் கூட்டத்தை நடத்தவுள்ள வேளையில் உலக வங்கி இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

பசி தொடர்பான நோய்களால் தினமும் சுமார் 40 ஆயிரம் பேர் உயிர்துறக்கின்றனர் எனத் தெரிவிக்கிறார் உலக வங்கியின் உதவித் தலைவர் இஸ்மாயில் சேராயெல்தீன். (இ-10)

## ஐ.நா.வுக்கு அமெ. செலுத்தவேண்டிய நிலுவைப்பணம் 150 கோடி டொலர்

நியூயோர்க், செப்.26

ஐ நா. அமைப்புக்குச் செலுத்த வேண்டிய நிலுவையை அமெரிக்கா உடனடியாகச் செலுத்த வேண்டும் என ஐரோப்பிய நாடுகள் கேட்டுள்ளன.

ஒவ்வொரு நாடும் குறித்த நேரத்தில் தனது சந்தாத் தொகையைச் செலுத்துவது அவசியம் என ஐரோப்பிய சங்கத்தின் சார்பில் பேசிய ஐரிஷ் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

அமெரிக்கா ஐ. நா. அமைப்புக்கு சுமார் 150 கோடி டொலரை நிலுவையாகச் செலுத்த வேண்டியுள்ளது.

இத்தொகை ஐ. நா. வுக்கு அனைத்து நாடுகளும் செலுத்த வேண்டிய தொகையின் பாதிக்கும் அதிகமாகும். (இ-10)

# பிரபாவுடன் நேரடியாகப் பேசி இருந்தால் ஜனாதிபதி தீர்வு ஒன்றைக் கண்டிருக்கலாம்!

## தென்ஆபிரிக்காவில் ஏற்பட்ட சமாதானம் இதற்கு நல்ல உதாரணம்

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரம் குறித்தும், இனப் பிரச்சினையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கையாளும் விதம் குறித்தும் முன்னாள் நிதி அமைச்சரும், தற்போதைய ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினருமான றொனி டிமெல் அரசசார்பு சிங்கள வார இதழான 'சிலுமின' வுக்கு வழங்கிய பேட்டியில் விவரித்தார். அப்பேட்டியின் முக்கிய பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.



அரசின் தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றவும் —

மக்கள் கருத்துக்கணிப்பில் சம்மதத்தைப் பெறவும் —அரசியல் கட்சிகளின் உடன்பாட்டைப் பெறும் முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

வடக்கு — கிழக்கில் பெரிய அளவில் யுத்தம் நடைபெற்று வருகிறது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எந்த ஒரு தமிழ் அரசியல் கட்சிக்கும் வடக்கு— கிழக்குக்குச் செல்ல முடியாத நிலைமை இருந்து வருகிறது.

அவர்கள் உண்மையில் வடக்கு — கிழக்கு மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள் எனக் கூற முடியாது. அப்படியாயின் நாங்கள் யாருடன் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது? எவருடன் பேச்சுவார்த்தை நடத்துவது?

தேசியக் கட்சிகளிடையே உடன்பாடு ஏற்படினும் எமது தீர்வை எவரிடம் கையளிப்பது? என்ற பிரச்சினை எழுகிறது.

### இலங்கை - இந்திய ஒப்பந்தம்

இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்கு அன்று விடுதலைப் புலிகள் அமைப்பு விரும்பியோ விரும்பாமலோ உடன்பாட்டைத் தெரிவித்தது.

அந்த வேளையில் இவ்விடயத்துக்குத் தீர்வு கண்டிருக்கலாம்.

எங்களிடையே இருந்தவர்களில் சிலர் அன்று காட்டிய எதிர்ப்பு மற்றும் அன்று உருவாகிய எதிர்ப்பும் காரணமாக தீர்வினைக் காண முடியாத நிலை உருவானது.

பிரபாகரனும் இதற்கு உடன்பாடு தெரிவித்த அந்த வேளையில் சிரமமின்றி தீர்வைக் கண்டிருக்கலாம். அதுவே நாங்கள் இழைத்த மாபெரும் தவறாகும். அப்போது நான் இங்கிலாந்தில் இருந்தேன்.

உண்மையைக் கூறுவதாயின் இந்த அரசாங்கம் நிலைமையை மேலும் சிக்கலாக்கிவிட்டது என்றே கூறலாம்.

தன்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தால் நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதாக ஜனாதிபதி சந்திரிகா தேர்தல் நேரத்தில் வாக்குறுதி அளித்திருந்தார். மக்களும் 62 சதவீத வாக்குகளை அளித்து அமைதியை வேண்டி மிக பெரும்பான்மையுடன் அவரைத் தெரிவு செய்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா தனது பிரதிநிதிகள் மட்டத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளாமல் நேரடியாக விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருப்பின் பிரச்சினைக்குத் தீர்வுகாண வழி ஏற்பட்டிருக்கும். ஆனால் அரசு தற்போது நிலைமையை மேலும் சிக்கலாகிவிட்டது.

தென் ஆபிரிக்காவில் நெல்சன் மண்டேலாவுக்கும், பிரதமர் கிளார்க்குக்குமிடையே நேரடியாகப் பேச்சுவார்த்தைகள் 2 வருடங்களாக இடம்பெற்றன. இதனால் ஒரு சமாதானத் தீர்வு எட்டப்பட்டது.

இதேபோல் இந்த அரசும் நேருக்கு நேர் (one to one) பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தால் தீர்வைக் கண்டிருக்க முடியும். இதை ஒரு சர்வதேச மத்தியஸ்தத்தின் மேற்பார்வையில் மேற்கொண்டிருந்தால் பல [illegible] போக்கியிருக்கலாம்.

### பிலிப்பீன்ஸில்

கடந்த 25 ஆண்டுகளாக பிலிப்பீன்ஸ் நாட்டில் மோறோ கிளர்ச்சியாளர்களின் போராட்டம் காரணமாக சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேர் பலியாயினர். அன்று அவர்களை பயங்கரவாதிகள் என்றே அழைத்தனர். ஆனால் இன்று மோறோ கிளர்ச்சியாளர்களுக்கும், பிலிப்பீன்ஸ் அரசுக்குமிடையே சமாதானத் தீர்வு எட்டப்பட்டுள்ளது.

இதுபோன்ற பிரச்சினைகளுக்குப் பல நாடுகளில் சமாதானத் தீர்வு எட்டப்பட்டுள்ளது. நேர்மையுடன் நேரடியான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டால் எங்கள் நாட்டிலும் சமாதானத்தை எட்டலாம் என்பதே எனது எண்ணமாகும்.

### 3 ஆம் தரப்பு மத்தியஸ்தம்

மூன்றாம் தரப்பினரின் மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப் படவேண்டும்.

எங்கள் நாட்டுக்கு சமாதானமே அவசியம். சமாதானம் ஏற்படாவிடில் எமது நாடு ஒருபோதும் முன்னேற்றமடையாது. உலகில் உள்ள ஏனைய நாடுகள் எங்களை முந்திச் செல்கின்றன. ஸ்ரீலங்கா தொடர்ந்தும் ஏழை நாடாகவே இருந்து வருகிறது.

உலகத்தில் யுத்தத்தின் மூலம் தீர்வினைக் கண்ட நாடு எதுவும் வரலாற்றில் இல்லை.

எல்லா நாடுகளும் இறுதியில் பேச்சுவார்த்தைகளையே மேற்கொண்டன. நாங்களும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டிய நிலை உருவாகும். இன்றேல் இந்த நாடு இரு துண்டாக உடையும்.

### யுத்தமும் தீர்வுத்திட்டமும்

பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஒரு புறத்தில் யுத்தத்தை நடத்திக்கொண்டு மறுபுறத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதச் சமரசம் பேணிய ஷீரடி சாயி நாதர்

மகாராஷ்டிர மாநிலத்தில் அகமத் நகரில் புனித கோதாவரிக்கு அண்மையில் உள்ளதே ஷீரடிக் கிராமம். அங்கு அறுபது ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த மகான்தான் ஷீரடி சாயி பாபா.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா தமது பதினான்காவது வயதில் தாம் ''சாயி பாபா'' என்றும் ஷீரடி சாயியின் மறு அவதாரம் என்றும் கூறியது குறிப்பிடத்தக்கது.

மஸ்மாத் என்ற இடத்தில் உள்ள பத்ரி என்றகிராமத்தில் கங்கா பாவத்யா என்ற அந்தணப் படகோட்டிக்கும் தேவகிரியம்மாவுக்கும் மூன்றாவது பிள்ளையாக சிவனே அவதரித்த சீலர் ஷீரடி பாபா.

பிறப்பால் பிராமணரான அவர், படீல் என்ற இஸ்லாமிய தம்பதியினரால் வளர்க்கப்பட்டு, கோபலராவ் என்ற சாதுவிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பத்து ஆண்டுகள் குருவோடு வாழ்ந்து பின்மேற்கு நோக்கிச் சென்ற பாபா, பின்னர் ஷீரடியில் பதினாறு வயது இளைஞராகக் காணப்பட்டார். மூன்று வருடங்களின் பின்னர் ஒரு வருட காலம் காணாமற் போயிருந்த பாபா 1958 இல் மீண்டும் ஷீரடிக்கு மீண்டார். அவர் மகா சமாதியடைந்த 1918 வரை அறுபது ஆண்டுகள் ஷீரடியிலேயே வாழ்ந்தார். அப்போது அவர் புரிந்த அற்புதங்கள் பலப் பல.

> பகவான் ஷீரடி சாயி நாதரின் அவதார தினம் நாளையாகும். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

ஆரம்பத்தில் வேப்பமரத்தின் கீழ் தங்கிய அவர், பின்னர் பாழடைந்த மசூதியை உறைவிடமாகக் கொண்டார். இரவில் சாவடி ஒன்றிலும் தங்கினார்.

வாழ்நாள் முழுவதும் பிச்சை யெடுத்தே உண்டார்; கிழிந்த கம்பளியை அணிந்தார்; சாக்கிலே படுத்து 'தூங்காத் துயில்' கொண்டார்; பல அற்புதங்களைப் புரிந்தார்; கோதுமை மாவைத் தூவச் செய்து கொலராவை ஷீரடியில் இருந்து விரட்டினார். தண்ணீரைக் கொண்டு அகல் விளக்குகளை எரியச் செய்தார்: மசூதியை ''துவாரகாமயி'' என்றார். சாம்பலை உள, உடல் நோய்களுக்கு மருந்தாகக் கொடுத்தார்.

எப்பொழுதும் 'அல்லா மாலிக்' (இறைவன் பெரியவன்) 'அல்லா பலா கரேகா' (ஆண்டவன் அருள் செய்வான்) என்றே ஷீரடி பாபா கூறுவார்.

அவர் மகா சமாதி அடைந்தபோது பூட்டி என்பவர் கட்டிய வாடாவில் இந்து, முஸ்லிம்களால் அவரின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது. இதுவே இன்றுள்ள ''சாயி மந்திர்'' ஆகும்.

ஷீரடி சாயி சர்வ மதங்களையும் சமமாக மதித்தவர். அல்லா, ஸ்ரீராமர், ஸ்ரீமத் நாராயணர், இயேசு அனைவரும் அவருக்கு ஒன்றே.

'நான் கடவுளின் அடிமை', 'நான் உங்கள் மலத்தில் உள்ள புழு', 'நீ என்னை நோக்கினால் நான் உன்னை நோக்குவேன்', குருவைப் பூரணமாக நம்பு; அது தான் ஒரே சாதனை', 'பசித்தவருக்கு உணவும், தாகம் கொண்டவருக்கு நீரும், உடையற்றவருக்கு உடையும் கொடு', 'இறைவன் நாமத்தை உச்சரி', 'புனித நூல்களைப் படி', 'குறைவாக உண்', 'எனக்கு அர்ப்பணிப்பதற்கு முன் எவர் ஒருவர் ஒருபோதும் உணவை உருசிக்க மாட்டாரோ அவருக்குக் கொடு', 'நான் அடிமை; எனது கல்லறை உங்களிடம் பேசும்; எனது மண்

(6 ஆம் பக்கம் பார்க்க)


## திருமறைக் கலாமன்றம்

# கல்விசார் கருத்தரங்கு

க. பொ. த. உயர்தர வகுப்பில்

## நாடகமும் அரங்கியலும்

கற்கின்ற மாணவருக்குப் பயன்படும் வகையில்
அமைந்ததொரு


### கல்விசார் கருத்தரங்கு

கருத்துரை வழங்குபவர்:
**திரு. குழந்தை ம. சண்முகலிங்கம்**

இடம்: திருமறைக்கலாமன்ற கேட்போர் கூடம்
காலம்: **28 – 09 – 96** சனிக்கிழமை
நேரம்: பி. ப. **4-00 — 6-00** (புதிய நேரம்)

— திருமறைக் கலாமன்றம்

(சி-3186)


# ஓவியம் படைத்திடுவீர்!

AHC

## உலக உளநல நாள் ஒக்ரோபர் - 10

★ மேற்படி நாளையொட்டி 'சாந்திகம்' உதயன் ஆதரவில் ஓவியப்படைப்புகளுக்கான களம் அமைகின்றது.
★ உங்களது ஓவியத்துவமான துலங்கல்களுக்கு பின்வரும் வாசகங்கள் தூண்டிகளாக அமையட்டும்.

★ மானசிகம் ★ மனத்தவம் ★ மனோதரிசனம்
★ மானச சஞ்சாரம் ★ மனவெளி

★ மேற்படி தூண்டிகளில் ஒன்றினை உங்களது படைப்பின் தொனிப்பொருளாகப் பொறிக்கவும்.
★ படைப்புகள் 25'' x 18'' அளவினதாக அமைய வேண்டும்.
★ ஆர்வமுள்ள அனைவரும் பங்கு கொள்ளலாம்.
★ ஓவிய வகைகளையும், ஓவியசாதனங்களையும் விரும்பியபடி தெரிவு செய்யலாம்.
★ படைப்பினை உங்களது பெயர், முகவரியோடு **20–10–96** - க்கு முன்னதாக பின்வரும் இடங்களில் சேர்ப்பிக்கவும்:

உதயன் பணிமனை, 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
சாந்திகம், இல. 15, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குளி.
உளநல சிகிச்சை நிலையம், யாழ். போதனா வைத்தியசாலை.

★ தெரிவு செய்யப்படும் கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர்.
★ முதலாவது தெரிவு — ரூ 5,000/-
★ இரண்டாவது தெரிவு — ரூ 3,000/-
★ மூன்றாவது தெரிவு — ரூ 2,000/-

★ தெரிவுக்குழுவின் தீர்ப்பே இறுதியானது.
★ சாந்திகம், உதயன் நிறுவனங்களில் பணிபுரி[illegible] பினர்களும் பங்குபற்ற முடியாது.


# சீவன் முத்தராக வாழ்ந்த யாழ். கடையிற் சுவாமிகள்

யாழ்ப்பாண மண்ணில் கண்கண்ட சிவனருட் சித்தர்களாக விளங்கியவர்களுள் முக்கியமானவர் கடையிற் சுவாமிகள்.

இந்தியாவின் பெங்களூரில் நீதிபதியாகக் கடமைபுரிந்த சுவாமிகள், கொலை வழக்கொன்றில் ஜூரிமார் குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கும்படி ஏகமனதாகக் கூறியபோது, ''ஒருவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்க நான் யார்?'' என்று சிந்தித்தார். அதனால் அக்கணமே பதவியைத் துறந்தார்; பரதேசிக் கோலம் பூண்டு பாடியாடித் திரிந்தார்; முத்தியானந்தர் எனும் தீட்சா நாமம் பெற்றுச் சித்துகள் பல புரிந்தார்.

> கடையிற் சுவாமிகளின் 105 ஆவது குரு பூசை இன்றாகும். அதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

ஈழத்துச் சித்தர் வரிசையில் சுவாமிகளே முதலில் வைத்து எண்ணப்படுபவராவார். இவருக்கென ஒரு சீடர் பரம்பரை உண்டு. செல்லப்பா சுவாமிகள், இவருடைய சீடராகிய யோகர் சுவாமிகள், சடைவரத சுவாமிகள், நன்னியர் சுவாமிகள், சின்னச்சாமி சுவாமிகள், சார்ஜன்ட் சுவாமிகள், குழந்தைவேல் சுவாமிகள் என இப்பட்டியல் நீண்டு செல்லும்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைரமுத்துச் செட்டியார் என்பவர் அந்நாளில் அடிக்கடி தலயாத்திரை மேற்கொண்டு இந்தியாவுக்குச் செல்வதுண்டு. முத்தியானந்தர் என்று அழைக்கப்பட்ட கடையிற் சுவாமிகளைத் தற்செயலாகக் கண்டு வணங்கும் பேறுபெற்ற செட்டியார், சுவாமிகளை இலங்கைக்கு வரும்படி பணிவுடன் கேட்டுக்கொண்டார். அதற்கிணங்கச் சுவாமிகளும் இலங்கைக்கு வந்து தமது வாழ்க்கையின் பெரும்பகுதியை யாழ்ப்பாண நகரின் கடைத் தெருக்களில் ஆடல் புரிவதில் கழித்தார். இக் காரணத்தினால் கடையிற் சுவாமிகள் எனும் திருநாமம் பெற்றார். அதனால் முத்தியானந்தர் எனும் தீட்சாநாமம் காலப் போக்கில் மறையலாயிற்று; சுவாமிகளுடைய பூர்வாச்சிரமம் பற்றிய வரலாறும் யாருக்கும் தெரியாமல் மறைந்துவிட்டது.

சித்தர்கள் என்போர் அட்டமாசித்திகள் கைவரப் பெற்றவர்கள். சுவாமிகளும் அத்தகைய ஆற்றல்கள் படைத்தவராகத் திகழ்ந்தார்.

ஒருசமயம் இவர் 'பேயன்', 'விசரன்' போலத் திரிவதைக் கண்ட பொலீஸார், இவரைக் கைதுசெய்து யாழ். கோட்டைப் பொலீஸ் நிலையத்தில் ஓர் அறையில் பூட்டுப்போட்டு அடைத்து வைத்தனர்.

அடுத்தநாள் அறையைத் திறந்து பார்த்தபோது சுவாமிகளைக் காணாது துணுக்குற்றனர். அதுமட்டுமன்றி அவர் கடைத்தெருவில் நிற்பதை அறிந்து ஆச்சரியமடைந்தனர். இதனால் சுவாமிகளிடத்தில் பக்திபூண்ட சார்ஜன்ட் சின்னத்தம்பி என்பவர் பிற்காலத்தில் கடையிற் சுவாமிகளின் சீடராகி சார்ஜன்ட் சுவாமிகள் என விளங்கினார்.

சித்தர்கள் இரும்பைப் பொன்னாக்கும் இரசவாத வித்தையிலும் வல்லவர்கள். தன்மீது பக்திபூண்டொழுகிய பொன்னம்மா குடும்பத்தினரின் வறுமையைப் போக்க இரும்பைப்பொன்னாக்கி உதவியவர் சுவாமிகள். அதுமட்டுமன்றி உருக்கிய நிலையில் கடுஞ்சூட்டுடன் இருந்த மெழுகை எவ்வித சலனமுமின்றி, தண்ணீர்போலப் பருகிய அற்புத வரலாறும் சுவாமிகள் வாழ்க்கையில் உண்டு.

சித்தர்களுக்கு அப்பால் சுவாமிகள் சீவன் முத்தராக சிவசொருபமாக வாழ்ந்த வாழ்க்கை முக்கியமானது. உள்ளத்தழுக்கை அகற்றாது புறவழுக்கைமட்டும் நீக்கி வாழ்ந்த வேடதாரிகள் பலருள்ள இவ்வுலகில் வெளித் தோற்றத்தால் பைத்தியக்காரன் போல அழுக்குத்துணியோடும் மாசடைந்த உடலோடும் திரிந்த சுவாமிகள் உள்ளத்தால் தூயவராகத் திகழ்ந்தார்.

பெரும்பெரும் பணக்காரரெல்லாம் சுவாமிகளின் அன்பைப் பெறவிழைந்தனர். சுயநலம் காரணமாக சுவாமிகளுக்கு எதையும் செய்யச் சிலர் சித்தமாக இருந்தனர். எல்லாம் உணர்ந்த சுவாமிகள் உண்மையான அன்பர்களுடைய உபசாரத்தையே ஏற்றுக் கொண்டார்.

சுவாமிகளின் சமாதிக் கோயில் யாழ்ப்பாணம் நீராவியடியில் உள்ளது. இது ஒரு சிவன் கோயிலாகும். சிறிது காலம் சரியாகப் பராமரிக்கப்படாமல் இருந்த இக்கோயில் இப்பொழுது ஓரளவு இக் குறைபாடுகள் நீங்கி நன்கு பராமரிக்கப்படுவதை அறியும் பொழுது மகிழ்ச்சியாகவுள்ளது.

கலாநிதி காரை.
செ. சுந்தரம்பிள்ளை

# வரவுக்குத் தகுந்தபடி செலவு செய்

மக்கள் கடனில்லாமல் வாழ்வதற்கு எத்தனையோ வழிகள் உள்ளன. எவ்வளவு பயனுடைய முக்கியமான செலவுகள் இருப்பினும் நம் வரவுக்கு மிஞ்சிய செலவினை ஒருபோதும் செய்யக் கூடாது. நமது வருவாய்க்கும் சொத்துக்கும் உரிய அளவில்தான் செலவினைச் செய்ய வேண்டும்.

டாக்டர் சாம்சன் என்பவர் தன்னுடைய நண்பருக்கு எழுதிய கடிதத்தில் ''எவருக்கும் எந்த வகையிலும் நாம் கடனாளியாகவே இருக்கக் கூடாது. ஏழையாக இருக்கக் கூடாது. என்பதைக் கடைப்பிடி. நமக்கு எவ்வளவு சொத்து இருப்பினும் செலவினைக் குறைத்துக் கொள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

நாம் எந்தப் பொருளை வாங்கப் போனாலும் முதற்கண் 3 கேள்விகள் நமக்குள் நாமே கேட்க வேண்டும். இது பயனுடைய பொருள் தானா? இதற்குரிய விலை சரிதானா? இந்தப்பொருள் இல்லாமல் நாம் வாழ முடியாதா? இக் கேள்விகளால் நமக்குக் கிடைக்கப்பெறும் விடைகள் நமக்குப் பிடித்தமாயிருப்பின் அந்தப் பொருளை வாங்கலாம். புறத்தோற்றத்தைக் கண்டு மயங்கி சிந்திக்காமலோ, விரைவாகவோ எதனையும் வாங்குவதற்குத் துணிதல் கூடாது.

ஒருவர் தமக்குள்ள வருவாய் எவ்வளவு கூடுதலாகவோ, எவ்வளவு குறைவாகவோ இருப்பினும் அதனை நான்கு பங்குகளாக்கி அவற்றில் இரண்டு பங்குகளை வீட்டுச் செலவுக்கு ஒதுக்குதலும், மற்றொரு பங்கை உடை, மருந்து, அறம் முதலிய செலவுகளுக்கு ஒதுக்குதலும், நான்காவதைப் பிற்காலத்தில் ஏற்படும் செலவுகளுக்கு வங்கியிலோ, அஞ்சலகத்திலோ சேமித்து வைக்க வேண்டும்.

கடைகளில் கடன் வைக்கக்கூடாது. கைப்பணத்தைக் கொண்டே கடைகளில் பொருள்களை வாங்க வேண்டும்.

கணக்கேடுவைத்து நம் வரவு செலவுகளை நாள்தோறும் பதிந்து வருதல் மிகவும் பயனுள்ளதாக அமையும். அதனால் ஏற்படும் நன்மைகள் அதிகம். யாருக்காவது நாம் பணம் கொடுக்க வேண்டுமாயின் நாமே நேரிற்சென்று கொடுக்க வேண்டும். கூடுமானவரை ஏவலாளர் ஊடாக அனுப்புவதைத் தவிர்க்க வேண்டும்.

தொகுப்பு: க. கனகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

முச்சக்கர வண்டி சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ. நன்னித்தம்பி, இல. 62/2 யாழ். இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (42856)

### தவறிவிட்டது

வதிரி தம்பிராசா தேவமதி ஆகிய எனது 687690796 V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை யாழ். ஆஸ்பத்திரி முன்பாக தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து திரவியராஜா, வாட் இல. 30, ஆஸ்பத்திரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும், (42850)

### பாலர் ஆசிரியராக

தபால் வழியில் பாலர் ஆசிரியர் பயிற்சி — க. பொ. த (சா/த) கடைசித் தகைமை யாகும். பாலர் ஆசிரியர் சங்கம், மே/பா: திரு. வீ. கே. கந்தசாமி, 20, அச்சக ஒழுங்கை, கொக்குவில்கிழக்கு, கொக்குவில். (42437)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விஷேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயாகடையடி' கண்டிவீதி, மீசாலை. (42841)

### ஆண்டு 7 - 11

மூன்றாம் தவணைப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறுடைய கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் (O/L இல் Distrinction, Credit பேறுடைய) 40 மணித்தியாலங்களில் B.Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, மணல்தறை லேன், சிவன்கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (42854)

### மணமகன் தேவை

வடமராட்சியில வசதி மிகக உயர் குலத்தைச் சேர்ந்த மெதடிஸ்ற் பெற்றோர் தங்களது படித்த அழகிய இருபது வயதுடைய ஒரே புத்திரிக்கு முப்பது வயதிற்குட்பட்ட இலங்கையில் அல்லது வெளிநாட்டில் வேலை செய்யும் கிறிஸ்தவ பொருத்தமான மணமகனை விரும்புகிறார்கள். மே/பா இல. 530, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (42830)


## பாம்புக்கடி அதிகரிப்பு

வன்னியில் பாம்புக்கடிக்கு ஆளாவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

வன்னியில் மக்கள் தற்சமயம் விவசாயச் செய்கைக்காக காணிகளை பண்படுத்த ஆரம்பித்துள்ளதால் பாம்புகள் வெளியேறி குடியிருப்புப் பகுதிகளுக்குள் செல்கின்றன என்று கூறப்படுகிறது.

அக்கராயன் குளம், மல்லாவி, புதுக்குடியிருப்பு ஆகிய வைத்தியசாலைகளில் தினமும் பாம்புக்கடிக்கு உள்ளாகி மூன்று அல்லது நான்கு பேர் அனுமதிக்கப்படுகின்றனர்.

அதேவேளை பாம்புக்கடிக்குரிய மருந்து அங்கு அறவே இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## வெற்றி தோல்வி இல்லை

உலகக் கோப்பை கால்பந்து போட்டித் தொடருக்கான ஆசிய மண்டல தகுதிச் சுற்றுப் போட்டிகளில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நடைபெற்ற ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

டோராவில் நேற்று முன்தினம் நடைபெற்றஇப் போட்டியில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் போட்டன. (இ-10)


# கலையகம் உயர்கல்வி நிறுவனம்

(நடராஜ ராமலிங்க வித்தியாலயம் முன்பாக)

சிவன் வீதி, ஆவரங்கால்.

★ விசேட ஆங்கில வகுப்புகள் (General English)

★ சிங்கள வகுப்புகள் (பேச, வாசிக்க, எழுத)

★ I st in Arts: முதலாண்டு கலைத் தேர்வு

ஆரம்பம்: **06 – 10 – 96**

பதிவுகள் — **26-09-96** இலிருந்து மாலை **3.00** மணி முதல் **5.00** மணிவரை.

இயக்குநர் - 'கோப்பாய் - சிவம்'

(42835)



கட்டைவேலி- நெல்லியடி

## ப. நோ. கூ. சங்கம் (வ/து)

# பதவிகள் வெற்றிடம்

**கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. பொது முகாமையாளர் — 165/88 - 08

சம்பளத் திட்டம் -

**1, 305 - 60 x 4 - 75 x 11 — 2, 370**

இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 09 வது சம்பளத் திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06 வருட அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) க. பொ. த. (உயர்தரம்) இல் 03 பாடத்திலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2. கணக்காளர் — 165/88 - 09

சம்பளத் திட்டம்:

**1,105 - 60 x 4 - 75 x 11 — 2,170**

இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்.

தகைமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 10வது சம்பளத் திட்டத்தில் கணக்காளர்/ கணக்காய்வாளர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பளத் திட்டத்திலான கணக்காளர்/ கணக்குப் பதிவாளர்/ கணக்கு அல்லது கணக்காய்வு லிகிதர் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சிய கணக்கு பதிவாளர் கல்வி நிலையத்தின் இறுதிப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனத்தில் கணக்காய்வாளர்/ கணக்காளர்/ மேற்பார்வையாளர் மட்டப் பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) அல்லது க. பொ. த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட 03 பாடங்களுடன் கணக்காளர்/ கணக்காய்வாளர்/ மேற்பார்வை மட்டப் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை:

**20 — 50** வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளருக்கு வயதெல்லையில் விலக்களிக்கப்படும்.

விண்ணப்பங்களுடன் தகைமைச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் **7-10-96** ஆம் திகதிக்கு முன்பாக ''தலைவர், கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்.

கட்டைவேலி - நெல்லியடி

ப. நோ. கூ. சங்கம்.

கரவெட்டி,
21-9-96.

[இ-1169]



பிரபாவுடன் . . .
(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)


தில் சமாதானத்தை எட்டலாம் என நான் நினைக்கவில்லை.

தற்போது முற்றிலுமாக யுத்தம் நடத்தப்படுகிறது. அதுவும் வெற்றியளிக்காத யுத்தம்.

முல்லைத்தீவு யுத்தத்திலிருந்து கிளிநொச்சியை நோக்கிய இராணுவ நடவடிக்கை வரை உற்றுநோக்குவோமேயானால் யுத்த தந்திரங்கள் வெற்றி அளிக்கும் விதத்தில் அமையவில்லை.

யுத்தத்துக்காக ஆண்டுதோறும் பெருந் தொகையான நிதி செலவிடப்படுகிறது. இச் செலவு மேன்மேலும் அதிகரித்துவருகிறது

## சங்கங்களில் ம.எண்ணெய்

வலிகாமம் தென்மேற்கு கூட்டுறவுச் சங்கங்களில் பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு ஐந்து லீற்றர் மண்எண்ணெயை விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரதேச செயலகங்களிலிருந்து மண்எண்ணெயை பெற்றுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இன்னும் சில தினங்களில் விநியோகத்தில் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க— விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கள் ஊடாக மண்எண்ணெய் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## மூலஸ்தானத்தில் . . .


(3ஆம் பக்கத் தொடர்ச்சி)


யுடையது. இலங்கையிலுள்ள திருமால் தலங்களில் மிகப் பழைமையானது. காடுறைஉலகத்தன்றிப் பெருமணல் உலகத்தில் இயற்கையழகு மிகுந்து வழியுமிடத்து மணற்குன்றுகளிடையே அமைந்து மாட்சியுடன் விளங்குகின்றது.

புரட்டாதிப் பௌர்ணமி நன்னாளைக் கடலாடு தீர்த்த தினமாகக் கொண்டு ஓர்அமாவாசையிலே கொடியேற்றத்துடன் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மகோற்சவம் ஆரம்பமாகின்றது. பதினேழு நாள்கள் கோலாகலத்துடன் திருவிழாக்கள் நடைபெறும். இவ் விழாக் காலத்திலே கண்ணனின் பாலலீலைகள் நாள்தோறும் நினைவு கூரப்படும்.

விழாக்காலத்திலே பாம்புத் திருவிழா, கம்சன்போர், வெண்ணெய்த் திருவிழா, பூதகி சங்காரம் என்பன சிறப்பாக மக்களால் நடித்துக் காட்டப்படுகின்றன.

இரதோற்சவத்திற்கு மறுநாள் பௌர்ணமி நன்னாளில் வங்காளவிரிகுடாவிலே என்றுமில்லாத திருநாளாக அலைகடல்கள் ஆர்ப்பரித்து வெண்ணுரை பொங்கிஎழப் பக்தர்கள் பக்தி மேலீட்டினால் அரோகரா, கோவிந்தா, கோபாலா, மாயவா, கேசவா பரந்தாமா ஓடிவாடா என ஆரவாரஞ்செய்யஆஞ்சநேயர் தீர்த்தம் நடைபெறும்.

பெண்கள், ஆண்கள், குழந்தைகள், முதியோர், பிணியாளர் என்ற பாகுபாடின்றி யாவரும் பாற்கடலிலே நீராடிப் பரந்தாமனின் அருள் பெற்று உய்வர். பதினேழாம் நாள் கேணித் தீர்த்தம் நடைபெறுவதுடன் மகோற்சவம் இனிதே நிறைவுறும்.

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் இன்னுமோர் சிறப்பம்சம் யாதெனில் அக்காலந் தொட்டு இக்காலம் வரை அந்நியர்களால் பாதிக்கப்படாத ஓர் ஆலயமாக இது திகழ்கின்றது ★


மதச் சமரசம்...
(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)


உங்களுக்குப் பதில் அளிக்கும்; எனது பெயரும் பேசும்' என்பன அவர் திருவாய் மொழிந்தவை.

ஷீரடி ஸ்ரீ சாயியைப் பணிவோம். எல்லோருக்கும் சாந்தி உண்டாவதாக!

—வி. கே. பாலசுப்பிரமணியம் —


# கண்ணீர் அஞ்சலி

புதிய உயர் கல்லூரி நிர்வாகியும்,
இந்துநாகரிக விரிவுரையாளரும், எமது ஆசிரியருமாகிய
திருமதி ச. அருள்நங்கை அவர்களின் தந்தை

## அமரர் தி. இராசரத்தினம்

அவர்கள்

இறைபதம் அடைந்ததையொட்டி துயருறும் அவர் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்கிறோம்.

(42858) 96 A/L கலைப்பிரிவு மாணவர்கள்



# 31-ம் நாள் நினைவஞ்சலி

யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலய ஆசிரியை
செல்வி பொ. தங்கேஸ்வரி அவர்களின்
அன்னையார்

திருமதி
பொன்னையா தெய்வானைப்பிள்ளை

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலய
அதிபர், ஆசிரியர்கள்.

(42802)



# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 22—06—1924



விண்ணில்: 23—09—1991

## அமரர் S. R பொன்னம்பலம்

(ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர், கோவிலாக்கண்டி.)

திதி: 26—09—1996

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு.''

மனைவி.

மீசாலை. (42746)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## மனமாற்றம் இன்றைய தேவை

நாட்டில் நிலவும் தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கென இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து உயர் தேசிய சபை ஒன்றை உருவாக்கவேண்டும்.

இவ்வாறு ஆலோசனை தெரிவித்திருக்கிறார் காணி, விவசாய அமைச்சரும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளருமான டி. எம் ஜெயரட்ண.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு எழுதிய கடிதத்திலேயே அரசாங்கக் கட்சியின் — கூட்டணிக் கட்சியின் — செயலாளரான அமைச்சர் இந்த ஆலோசனையைத் தெரிவித்துள்ளார்.

தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு — குறிப்பாக நீண்ட காலமாக நாட்டைச் சீரழித்துவரும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு— தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் — அரசாங்கக் கட்சியும் எதிர்க்கட்சியும் — இணைந்து செயற்பட வேண்டும் என்ற கருத்து ஒன்றும் புதியதல்ல.

அரசியலுக்கு வெளியே உள்ள புத்திஜீவிகள், விமர்சகர்கள், பத்திரிகையாளர்கள் என்று பல தரப்பினரும் வலியுறுத்தி வரும் விடயம் இது. அரசியலில் ஈடுபட்டுள்ள ஒரு சிலர் வாய் தடுமாறிச் சொல்லியிருப்பினும், அது குறித்து இரண்டில் எந்தத் தரப்பும் ஆழமாக அக்கறை காட்டியதில்லை.

நாட்டின் முக்கிய பிரச்சினைகள் குறித்துப் பிரஸ்தாபிக்கப்படும் போதெல்லாம், அண்மைக் காலமாக அடிக்கடி இரு தரப்பு ஒற்றுமை குறித்தும் தேசிய அரசாங்கம் பற்றியும் பேசப்பட்டு வருகிறது.

அமைச்சர் ஜெயரட்ண எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு எழுதிய கடிதத்திலும் அரச— எதிர்க்கட்சிகள் தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இணைந்து செயலாற்றுவதன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தார்.

தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, ஒன்றுபட்டுச் செயலாற்றுவதற்கு ஐ. தே. க தயாராக இருப்பதாக ரணில் பதிலும் அனுப்பியிருந்தார்.

ஆனால், அதற்கிடையில் நிலைமை தலைகீழாகக் குழம்பி விட்டது! அரசுக்கு எந்த விடயத்திலும் எந்த விதத்திலும் ஒத்துழைப்பு வழங்குவதில்லை என்று முடிவெடுக்கும் கட்டத்துக்கு ஐ. தே. க. வந்திருக்கிறது! இது குறித்து இப்பத்தியில் நேற்று விரிவாக ஆராய்ந்திருந்தோம்.

இன்றைய சூழ்நிலையில் அரசியல், பொருளாதாரத் துறைகளில் எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பு இன்றி செயற்பட முடியாத ஓர் இக்கட்டான சூழ்நிலையில் அரசாங்கக் கட்சி உள்ளது என்பதே உண்மை. முன்னாள் நிதி அமைச்சரும், ஐ. தே. கட்சியின் எம். பியுமான றொனி டி மெல்லுடன் ஜனாதிபதி மூன்று மணி நேரம் நீண்ட பேச்சு நடத்தியது அதற்கான ஓர் அத்தாட்சி. பொருளாதாரத் துறையை எவ்வாறு நிமிர்த்தி எடுக்கலாம் என்று றொனியிடம் ஆலோசனை கேட்கப்பட்டிருந்தது!

எனவே —

அரசு—ஜனாதிபதி— தனது கௌரவப் பிரச்சினையை நோக்காது, எதிர்க்கட்சியை அரவணைக்க மனமாற்றம் அடைவதும், அக்கட்சிக்கு எதிரான அரசியல் வன்முறைகளைத் தடுப்பதும் நாட்டு நலன் கருதிய இன்றைய முக்கிய தேவைகள்.

# முல்லையில் காணாமற்போனோர் பட்டியலை அரசு வெளியிடாது

## 'லக்பிம' வார இதழ் தகவல்

கொழும்பு, செப். 25

முல்லைத்தீவு முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது காணாமற் போன படையினர் பற்றிய விவரங்களை இராணுவம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கையளிக்காது என தெரிவிக்கப்படுகிறது.

காணாமற் போனவர்கள் பற்றிய விவரங்களை விசாரித்து அறிவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசகுழு சொந்தத்தில் நடவடிக்கை எடுத்துள்ளது ஆனால் காணாமற் போனோர் பற்றிய பட்டியலை இராணுவம் கையளிக்காது என ''லக்பிம'' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

இந்த விவரங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவிடம் கையளித்தால், எந்தெந்த அதிகாரிகள் காணாமற்போயுள்ளனர் என்ற விவரங்கள் புலிகளுக்குக் கிடைத்துவிடும் எனவும் — அது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும் — இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என்றும் — ''லக்பிம'' செய்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும் முல்லைத்தீவில் காணாமற் போயுள்ள தங்கள் பிள்ளைகள், கணவன்மார் பற்றிய விவரங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடமிருந்து அறிவதற்கு படையினரின் குடும்பத்தினருக்குத் தடை எதுவும் இல்லை என அந்தப் பேச்சாளர் தெரிவித்தார் — என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

## குடாநாட்டு வீதிகள் படுமோசம்

வடமராட்சி, செப். 26

யாழ். குடாநாட்டில் பெரும்பாலான வீதிகள் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன.

மழைகாலம் தொடங்கினால் இவ்வீதிகள் ஊடாக போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்படும்.

மக்கள் மீண்டும் வலிகாமம் திரும்பியபோது பல உயர் அதிகாரிகள் இங்கு வந்து இவ்வீதிகளைப் பார்வையிட்டுச் சென்றனர்.

இவ் வீதிகள் உடன் திருத்தப்படும் எனவும் அவர்கள் கூறியிருந்தனர். ஆனால் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(இ-173)

## 4 ஆவது சிமெந்து ஆலை திருகோணமலையில்!

கொழும்பு, செப். 26

இந்நாட்டின் நான்காவது சிமெந்துத் தொழிற்சாலைக்கான நிர்மாண வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

திருகோணமலைத் துறைமுகத்துக்கு அருகில் 67கோடி 90 இலட்சம் ரூபா செலவில் இந்தத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

முதலீட்டு சபைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் இத் தொழிற்சாலையில் ஜப்பானிய நிறுவனம் ஒன்று முதலீடு செய்கிறது. ''பியூஜி சிமென்ட் லங்கா நிறுவனம்'' உற்பத்தி மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஜப்பானிய நிபுணர்களின் உதவியுடன் பொறியியலாளர்களும், ஊழியர்களும் நிர்மாண வேலைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அடுத்தாண்டு நடுப்பகுதிக்கு முன்பதாக தொழிற்சாலையின் உற்பத்தி வேலைகள் ஆரம்பமாகுமெனவும்—

வருடமொன்றுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்தை உற்பத்தி செய்வதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும்— அந்த நிறுவனத்தின் உள்ளூர் பிரதிநிதியான எஸ் ஆர். ஞானம் தெரிவித்தார்.

இப்போது காங்கேசன்துறை, புத்தளம், காலி ஆகிய இடங்களில் சிமெந்துத் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. எனினும் காங்கேசன்துறையில் உள்ள இரண்டு ஆலைகளும் கடந்த ஆறு வருடங்களாக இயங்காதிருப்பது குறிப்பிடத்தக்கது.

(இ- 10)

## வெள்ளரசை தாக்குதலில் இருந்து காக்க விசேட திட்டம்

கொழும்பு, செப் 26

அநுராதபுரத்தில் உள்ள புனித வெள்ளரசு மரத்தை புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தலில் இருந்து காப்பாற்ற விசேட பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதனைச் சூழவுள்ள பகுதியில் பலமான இரும்பு வேலி அமைக்கப்படவிருக்கிறது.

இரும்பு வேலி அமைக்கும் பணியைப் பொலீஸார் மேற்கொள்ளவிருப்பதாகவும் —

இதற்காக சுமார் 10 லட்சம் ரூபாவை பொலீஸ் மா அதிபர் ஒதுக்கியுள்ளதாகவும் — சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதேசமயம் வடமத்திய மாகாணசபை 5 லட்சம் ரூபா செலவில் உலோகங்களைக் கண்டுபிடிக்கும் விசேட வாயில் கதவுகளை மேற்படி தலத்துக்குப் பொருத்த ஏற்பாடு செய்துள்ளது.

இந்த வழிபாட்டுத் தலத்தைச் சூழவுள்ள பகுதிகளில் வீதித்தடைகள் போடப்பட்டு, பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

(இ-3)

## வடமராட்சியில் பிரஜைகள் குழுக்கள்

வடமராட்சி, செப். 26

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை),வடமராட்சி தென்மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலர் பிரிவுகளில் பிரஜைகள் குழுக்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் தலைவராக தொழிலதிகாரி ஆ. பசுபதியும், உபதலைவராக திரு இ. தேவகுருவும், செயலாளராக திரு. த. அன்பழகனும் தெரிவானார்கள்.

கரவெட்டி பிரஜைகள் குழுவின் தலைவராக இளைப்பாறிய தபாலதிபர் திரு. வீ. எஸ். வீரசிங்கமும், உபதலைவராக திரு. ஜே. ஜி இராஜேந்திரமும், செயலாளராக இளைப்பாறிய தபாலதிபர் திரு. எஸ். சிவப்பிரகாசமும் தெரிவானார்கள்.

அவ்வப் பகுதி பிரதேச செயலகங்களில் பிரஜைகள் குழுக்கள் இருவாரங்களுக்கு ஒரு தடவை கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-173)

## கசிப்பு வைத்திருந்த 8 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப். 26

கசிப்பு வைத்திருந்தது, தயாரித்தது ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் 3 பெண்கள் உட்பட 8 பேருக்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. கு. ஜெயராஜதேவன் அபராதம் விதித்தார்.

யாழ். மதுவரி பிரதி ஆணையாளர் வி துரைராஜாவின் மேற்பார்வையில் யாழ். மல்லாகப்பகுதி மதுவரி உத்தியோகத்தர்கள் இருபாகரன், திருநாவுக்கரசு, செல்வராசா ஆகியோர் மேற்கொண்ட திடீர்ச் சோதனையின் போது இவர்கள் கைதாகினர்.

கைதான எட்டுப் பேரும் நீதிபதிமுன் ஆஜர் செய்யப்பட்டனர்.

ஊரெழு, உரும்பராய், ஏழாலைப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச்சோதனையின் போது இவர்கள் பிடிபட்டிருந்தனர்.

(இ-3)

## வாசகர் திருமுகம்

### பொறுப்பானவர்களின் கவனத்துக்கு

இராணுவ நடவடிக்கை காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கு இடம் பெயர்ந்த அரச ஊழியர் ஒருபுறம், வன்னியில் இருந்து விடுமுறையில் வந்து தமது அலுவலகத்துக்குப் போகமுடியாது திண்டாடும் அரச ஊழியர் மறுபுறம் இருபக்கத்தினரும் இரு இடங்களிலும் சம்பளம் பெறாது கஷ்டப்படுவது, மிகவும் மனவருத்தத்துக்குரிய ஒன்றாகும். இவர்களைப்பற்றிக் கவலைப்படுவோர் யாருமில்லை. இருபகுதியாரும் மனவேதனைகளோடு காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர்.

வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்ற அரச ஊழியருக்கு வன்னியிலும்- வன்னியில் இருந்து வந்து போகமுடியாது தவிக்கும் அரச ஊழியருக்கு யாழ்ப்பாணத்திலும் தற்காலிக இடமாற்றத்தை வழங்கினால் இப்பிரச்சினையை சுமுகமாக முடித்து வைக்கலாம். இவர்களைப் பற்றி சிந்திப்பது யார்? பொறுப்பானவர்களுக்கு இவர்களின் பிரச்சினை சமர்ப்பணம்.

சம்பந்தப்பட்ட அரச ஊழியர் படும் அவலத்தை நினைந்து மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் பிரச்சினையை அணுகி இவர்கள் படும் துன்பநிலையைப் போக்கினால் —

கால ஓட்டத்தால் அழியாத பெயர்களைச் சம்பாதித்த பெருமையோடு, கஷ்டப்படும் அரச ஊழியரின் குடும்பத்தையும், வாழ்க்கையையும் வளம்படுத்திய நல்ல மனிதராகவும் பொறுப்பானவர்கள்கணிக்கப்பட இடமுண்டல்லவா?

மனதுக்குள் வெந்து கொண்டிருக்கும் விடயத்தை வெளிக் கொண்டு வந்துள்ளேன். பொறுப்பானவர்கள் பெரிய மனதுடன் இப்பிரச்சினைக்கு என்ன சொல்வார்கள், என்ன செய்வார்கள்? பொறுத்திருந்து பார்ப்போம்!

எஸ். தயாளன்

மீசாலை வடக்கு,
சாவகச்சேரி.

### உரியவர்களுக்குக் கசக்குமா?

தென்மராட்சி பகுதிக்கான, புத்தூர் சந்தி கமநல சேவை நிலையத்தில் விவசாயிகளுக்கான மண்எண்ணெய் விநியோகம் 17-9-96 அன்று நடைபெற்றது.

கம நல சேவை நிலைய தகுதிவாய்ந்த அதிகாரி என்னுடைய தோட்டத்தைப் பார்வையிட்டு குறிப்பிட்ட அளவு மண்எண்ணெய்க்குச் சிபார்சு செய்தார். எமது பகுதி கிராம சேவகரும் சிபார்சு செய்தார். இருவரினதும் அறிவுறுத்தலின் பேரில் பதினேழாம் திகதி மு.ப.11 மணிக்கு மண்எண்ணெய் பெற கமநல சேவை நிலையத்திற்குச் சென்றேன்.

சிபார்சு செய்யப்பட்ட அளவுக்கு எண்ணெய் தருவதாக பணம் செலுத்துவதற்குச் சிட்டை எழுதப்பட்டது. ஆனால் வேறு ஓர் அதிகாரி கமநல சேவை அதிகாரி சிபார்சு செய்தளவில் அரைப்பங்கையே வழங்கும்படி கூறினார். நான் எண்ணெய் பெறாமல் திரும்பிவிட்டேன்.

கமநல சேவை நிலையத்தில் மண்எண்ணெய் விநியோகிக்கப்பட்ட அதே தினத்தில், வெளிச் சந்தையில் ஒரு லீற்றர் மண்எண்ணெயை முப்பது ரூபா வீதம் தாராளமாகப் பெற முடிந்தது. இவ்வாறு விற்கப்பட்ட எண்ணெய் கமநல சேவை நிலையத்தில் விநியோகிக்கப்பட்டதாக இருக்குமோ என்று பலரும் சந்தேகப்பட்டனர்.

முற்கூறப்பட்ட சம்பவம் கமநல சேவை நிலையத்தில் எனக்கு ஏற்பட்ட இரண்டாவது கசப்பான அனுபவமாகும்.

உரியவர்களுக்கு இது கசக்குமா?

செ. அமரசேகரம்

பெரியநாவலடி,
கொடிகாமம்.

### நிம்மதியாக வாழ்வது எப்படி?

இருபாலை கிழக்கில் மக்கள் அதிகமாக வாழும் பகுதியில் உள்ள தவறணையின் நுகர்வாளர்களின் அட்டகாசமும் சேட்டைகளும் அப்பகுதி மக்களின் நாளாந்த சமூக வாழ்க்கையை வெகுவாகப் பாதிக்கின்றன.

மது நுகர்வாளர்கள் நடுத் தெருவில் நிற்பதால் அப்பகுதி வாழ் மக்களின் கௌரவமான போக்குவரத்திற்கு வேறு பாதையொன்றைத் திறக்க வேண்டி நேரிட்டுள்ளது.

அரசாங்க அதிபரும், கோப்பாய் உதவி அரசாங்க அதிபரும், பனை தெங்கு கூட்டுறவுச் சங்கமும் தலையிட்டு, தவறணையை மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிக்கு உடன் மாற்றுவது விரும்பத்தக்கது.

ந. திருவேரகநாதன்

இருபாலை கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த காரைநகர் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை

## பொன்னாலை வழியாக அழைத்துச் செல்லப்படுவர்

யாழ்ப்பாணம் செப். 26

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை அங்கு மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் —

மீளக் குடியேற இருப்பவர்கள் தமது விவரங்களை கிராம சேவையாளர்களிடம் பதியுமாறு யாழ். மேலதிக அரச அதிபர் திரு. க. சண்முகநாதன் கேட்டுள்ளார்.

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்து தற்சமயம் சங்கானை, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் மக்களில் காரைநகருக்குச் சென்று குடியேற விரும்புபவர்கள் தமது பெயர் மற்றும் குடும்ப விவரங்களை கா. குலசேகரம், க. கனக சபாபதி ஆகிய கிராம அலுவலர்களிடம் பதியுமாறும் அவர் கேட்டுள்ளார்.

காரைநகர் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பொன்னாலைப்பாலம் ஊடாக காரைநகர் செல்வதற்கு யாழ். அரச அதிபர் உரிய ஒழுங்குகளைச் செய்துள்ளார் என்றும் —

மீளக் குடியேறுபவர்களை இ. போ. ச பஸ்கள் மூலம் அழைத்துச் செல்ல ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் — அவர் தெரிவித்தார். (இ-3)

# ராஜீவ் கொலை வழக்கு தீர்ப்பு அடுத்த மாதம்

கடந்த நான்கு ஆண்டுகளாக நடந்த ராஜீவ்காந்தி கொலை வழக்கில் அடுத்த மாதம் தீர்ப்பு வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த வழக்கில் 250 பேர் சாட்சியம் அளித்துள்ளதாகவும்-

சி.பி.ஐ. அதிகாரிகளின் குறுக்கு விசாரணை மட்டும் பாக்கியாக இருக்கிறது என்றும்-

இந்த விசாரணைகள் ஒக்ரோபர் மாத இறுதியில் அல்லது நவம்பர் மாத ஆரம்பத்தில் முடியும் என்றும்- தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# வன்னியிலுள்ள பல்கலை. ஊழியருக்குச் சம்பளம்

யாழ்ப்பாணம், செப். 26

வன்னி மாவட்டத்தில் தங்கியுள்ள யாழ். பல்கலைக்கழக ஊழியர்களுக்கு இம்மாதம் வரையான சம்பளத்தை வழங்குவதென பல்கலைக்கழக பேரவை முடிவு செய்துள்ளது.

வன்னி மாவட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அலுவலகம் செயற்பட்ட சமயம் அங்கு பணியாற்றியவர்களில் இது வரை போக்குவரத்து வசதிகிடைக்காத நிலையில் இன்னமும் 112 பேர் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான சம்பளம் கடந்த ஜுலை மாதத்தில் இருந்து நிறுத்தப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக பேரவை கூடி இது குறித்து ஆராய்ந்து செப்ரெம்பர் மாதம் வரையான சம்பளத்தை வழங்க முடிவு செய்துள்ளது. (இ-3)

# வடக்கு - கிழக்குப் பகுதியில் வலயக் கல்வி முறை

## அடுத்த ஜனவரி தொடக்கம் அமுல்

அரசாங்கத்தின் புதிய கல்விக் கொள்கைத்திட்டத்தின்படி வலயக்கல்வி அலுவலக முறை வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள 9 கல்வி மாவட்டங்களிலும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக மாகாண கல்வியமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அமைப்புக்குறித்து அந்த அதிகாரி மேலும் தெரிவித்ததாவது:-

புதிய வலயக்கல்வி அலுவலகங்களை அமுல் நடத்துவதில் ஏற்பட்டுள்ள ஆளணிப் பற்றாக்குறை குறித்து ஆளுநருடன் மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா ஆலோசனை செய்து வருகிறார்.

வன்னி மாவட்டத்தில் மன்னார், வவுனியா I, வவுனியா II எனும் வலயங்களும், வவுனியா மேலதிக மாகாண கல்வி அலுவலகமும் —

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில், கிளிநொச்சி, முல்லைத்தீவு I, முல்லைத்தீவு II ஆகிய வலயங்களும், கிளிநொச்சி மேலதிக மாகாண கல்வி அலுவலகமும் —

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம், கோப்பாய், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய வலயங்களும், யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்வி அலுவலகமும் — செயற்படவிருக்கின்றன.

கிழக்கில் கல்முனை, அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் மேலதிக மாகாணக் கல்வி அலுவலகங்களும் —

கல்முனை, அக்கரைப்பற்று, அம்பாறை, தெஹியத்த, கண்டி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை, திருகோணமலை, மூதூர், கந்தளாய் ஆகிய இடங்களில் வலய அலுவலகங்களும் இயங்கவிருக்கின்றன. (இ-3)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

### பரந்தன்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நகரை நோக்கி நேரடி இராணுவ நகர்வு இடம்பெறுவதாக தகவல் ஏதும் இல்லை. நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ள படைகளுக்கு ஆதரவாக விமானப்படை விமானங்கள் தொடர்ந்து குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும்-

பீரங்கிகள், கவசவாகனங்கள் போன்றவை ஷெல்’பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும்-

இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சமரில் ஓர் அதிகாரி உட்பட 21 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் 36 படையினர் காயமுற்றனர் என்றும் அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இவர்களுடன் சேர்த்து முதல் மூன்று நாள் சண்டையில் 58 படையினர் உயிரிழந்துள்ளனர், 65 படையினர் காயமடைந்துள்ளனர்.

இச்சண்டையில் ஐந்நூறு விடுதலைப் புலிகள் உயிரிழந்திருக்கவோ அல்லது காயமடைந்திருக்கவோ கூடும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

எனினும் புலிகளின் இழப்புத் தொடர்பான புலிகள் தரப்பு அறிவிப்பு ஏதும் கிடைக்கவில்லை.

### யாழ். அரசாங்க..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கொடுப்பனவுகள் ஜுலை மாதம் 15 ஆம் திகதி முதல் அமுலுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பகுதிகளில் வன்முறைகள் இல்லை என்று அரசாங்கம் அறிவிக்கும் வரை இக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களது சம்பளத்தில் 25 சதவீதம் ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்படும் என்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. (இ-3)

# மருந்து இன்றி இயங்கும் தெல்லிப்பளை ஆஸ்பத்திரி

வலி. தென். மேற்கு செப். 26

தெல்லிப்பளை அரசாங்க வைத்தியசாலை பெரும் குறைபாடுகளுடன் மானிப்பாயில் இயங்கி வருகின்றது.

‘‘பென்சிலின் ஊசியைத் தவிர வேறு எந்த மருந்தும் இல்லை. அனைத்து மருந்துகளையும் மருந்தகங்களில் வாங்கி உபயோகிக்கும் படி நோயாளர்களுக்கு பணிக்கின்றோம்’’ என்று தெல்லிப்பளை வைத்தியசாலையில் பணிபுரியும் மாவட்ட வைத்திய அதிகாரி செல்வி சிவராணி தெரிவித்தார்.

இங்கு பன்டேஜ் இல்லை. பனடோல் கூட இல்லை, அம்பசிலின், பிரிட்டோன் ஆகிய எவையுமே இல்லை.

மனநோய் சிகிச்சைக் களமும், குழந்தைகளுக்கான சிகிச்சைக்களமும் மட்டுமே செயற்படுகின்றன.

பிரசவ விடுதி இயங்கவில்லை. இதே மாதிரி பல குறைபாடுகளுடன் இந்த வைத்தியசாலை இயங்கி வருகின்றது என அவர் மேலும் குறிப்பிட்டார். (இ-145)

# சமய சந்நிதிகளில்

இன்று புரட்டாதி முழுமதி நாளாகும்; குடாநாட்டில் உள்ள பல அம்பாள் ஆலயங்களில் திருவிளக்கு மற்றும் சுமங்கலிப் பூசைகள் நடைபெறும் (அ-30)

★ ★ ★

யாழ். போதனா வைத்தியசாலை ஆரோக்கிய அன்னை வேளாங்கண்ணி மாதா விழாவினை ஒட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணிக்குத் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவ்விழாவினை ஒட்டி நாளையும், சனிக்கிழமையும் மாலை 5 மணிக்குத் திருப்பலியும் விசேட ஆசீர்களும் இடம் பெறும். (அ-15)

★ ★ ★

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தினமும் மாலை 4 மணிக்கு நவநாள் ஆராதனைகள் நடைபெற்று, ஒக்ரோபர் 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நற்கருணை வழிபாடும் அதனைத்தொடர்ந்து நற்கருணைப் பவனியும் இடம்பெறும். அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்கு திருநாள் கூட்டுத்திருப்பலியை தொடர்ந்து செபமாலை அன்னையின் திருச்சொரூப ரத பவனி நடைபெறும். (அ-30)

★ ★ ★

ஸ்ரீசீரடி பாபா பிறந்த தின விழா நாளை மறுதினம் சனிக்கிழமை, யாழ்ப்பாணம் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறும்.

அன்று காலை 8-25 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் விழாவில் —

ஸ்ரீசீரடி பாபா சற்சரித படன பூர்த்தியும் பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளும் ஸ்ரீ காயத்திரி மந்திர உச்சாடனமும் பஜனையும் இடம்பெறும்.

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் தி. கிருஷ்ணகுமார் விசேட சொற்பொழிவாற்றுவார். [அ]

### தெரிவுக்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யேறும் நிலையில் ஐ. தே. க. இருப்பதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகி இருந்தது தெரிந்ததே. (இ-3)

# சுன்னாகம் வங்கியில் ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், செப். 26

சுன்னாகத்தில் இயங்கும் சகல வங்கிக் கிளைகளிலும் நாளை வெள்ளிக் கிழமை இம்மாத ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று உடுவில் உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் தெரிவித்தார். (இ-3)

# பணவீக்கம் அதிகரிப்பு

மணிலா, செப். 26

இலங்கையின் பணவீக்க அளவு கடந்த ஆண்டு 7.7 சராசரி சதவீதத்தில் இருந்தது.

இப்போது அது 19.2 சதவீதமாக உயர்ந்துள்ளது. (இ-3)

# ஏழாலையில் மிதிவெடி ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 26

ஏழாலையில் நேற்று இடம் பெற்ற மிதிவெடிச் சம்பவமொன்றில் ஒருவர்காயமடைந்தார்.

தோட்டத்தில் கொத்திக் கொண்டிருந்தவர்களில் ஒருவரின் மண்வெட்டி மிதிவெடியில் பட்டு வெடித்தபோதே அருகில் இருந்தவர் காயமடைந்தார். கொத்திக் கொண்டிருந்தவர்கள்தெய்வாதீனமாகக் காயமெதுவுமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

ஏழாலையைச் சேர்ந்த நாகமணி அரியரட்ணம்(வயது 52) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

# திரேஸா வீடு திரும்பினார்

மணிலா, செப். 26

நாற்காலியில் இருந்து தவறி வீழ்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அன்னை திரேஸா நேற்று தமது இல்லம் திரும்பினார். (இ-3)

தரமான புளொக்குகளைத் தயாரிக்க
யாழ். நகரில் ஒரே நிறுவனம்

அருண் புளொக் தயாரிப்பாளர்கள்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் [illegible] யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-09-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org